முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.8.2025) சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர் ரகுமான் கான் அவர்கள் எழுதிய நியாயங்களின் பயணம். மௌனமாய் உறங்கும் பனித்துளிகள், உலகமறியா தாஜ்மஹால்கள். பூழுக்கும் இலையுதிர் காலம், வானம் பார்க்காத நட்சத்திரங்கள் மற்றும் சட்டமன்ற பேருரைகள் அடங்கிய "இடி முழக்கம் ஆகிய நூல்களை வெளியிட இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நீதியரசர்கள், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் பாக்டர் சுபேர்கான், ரியாஸ்கான் உள்ளிட்ட குடும்பத்தினர்கள், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை ஜோ அருண், புத்தக பதிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.8.2025) கன்னியாகுமரி, திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி, தென்காசி, இராமநாதபுரம், மதுரை, திருவள்ளூர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களிலிருந்து இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் தமிழர்கள் சந்தித்து, மறுவாழ்வு முகாம்களில் வாழும் தமிழர்களின் நலனுக்காக நிதி உதவி, குடியுரிமை முயற்சிகள், அடிப்படை வசதிகள் மேம்பாடு போன்ற பல்வேறு மறுவாழ்வுத் திட்டங்களுக்காக தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் உள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

'அன்னம் தரும் அமுதகரம்' 183 வது நாள்!

துறைமுகம் தொகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஆக.22-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 183 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (21.08.2025), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் மேற்கு பகுதி, வட்டம் 57, தண்ணீர் தொட்டி, வால் டாக்ஸ் ரோடு. 2) துறைமுகம் கிழக்கு பகுதி, வட்டம் 55அ, அம்மன் கோயில் தெரு, கோவிந்தப்பா தெரு சந்திப்பு, சென்னை ஆகிய பகுதிகளில்

இந்து சமய அறநிலை யத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் வட்ட கழக செயலாளர்கள்: எல். சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே. ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட பகுதியில்

"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாம்!

நாளை நடைபெறுகிறது!

சென்னை.ஆக.22-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைக்கும் விதமாக, 02.08.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியில் முதல் மருத்துவ முகாமினை தேனாம்பேட்டை மண்டலம், சாந்தோம் செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேலும் 14 "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாம்கள் நடைபெறவுள்ளது. அதனடிப்படையில், 23.08.2025 அன்று (சனிக்கிழமை) ஆலந்தூர் மண்டலம், ஏ.ஜெ.எஸ். நிதி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. இந்த மருத்துவ முகாம்கள் சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதயவியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், நுரையீரல் மருத்துவம், இந்திய முறை மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம் மற்றும் ஸ்கேன் பரிசோதனை ஆகிய 17 சிறப்பு மருத்துவர்களின் மருத்துவ ஆலோசனைகள், அடிப்படை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனை, முழுமையான உடல் ஆரோக்கிய பரிசோதனை, காசநோய், தொழுநோய் பரிசோதனை, ஆரம்ப புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை ஆகிய மருத்துவ சேவைகள் வழங்கப்படுகிறது.

மேலும், முதலமைச்சரின் விரிவாக மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தல், மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர் அடையாள அட்டை வழங்குதல், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து விழிப்புணர்வு பிரச்சாரம் போன்ற இணைச்சேவைகளும் வழங்கப்படுகிறது.

ஆலந்தூர் மண்டலத்தில் 23.08.2025 அன்று நடைபெறவுள்ள "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாமில் பொது மக்கள் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மயிலை த.வேலு ஆலோசனை! நந்தனம் கி.மதி – கோவி.லெனின் பங்கேற்பு!

121வது வட்ட செயற்க்குழுக் கூட்டம்!

வட்டக் கழகச் செயலாளர் டி.ராஜவேலு அறிக்கை!

சென்னை, ஆக. 22-

சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 121 வது வட்ட கழக செயற்குழு மற்றும் நிர்வாகிகள் கூட்டம் இன்று (22.08.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் முன்டகக்கன்னி அம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள ராம் மந்திர் திருமண மண்டபத்தில் 121 வது வட்டகழக செயலாளர் டி. ராஜவேலு தலைமையில் செயற்க்குழுக் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினரும் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார்.

இதில் மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம். கி.மதி எம்.சி., மயிலாப்பூர் தொகுதி பார்வையாளர் தகவல் தொழில் நுட்ப அணி மாநில ஆலோசகர் கோவி. லெனின் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

எனவே 121வது வட்டக்கழகத்திற்குட்பட்ட BLA2, BDA மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்தற்கு நன்றி தெரிவித்தல்

மற்றும் கழக ஆக்க பணிகள்

இவ்வாறு 121 வது வட்டக கழக செயலாளர் டி.ராஜவேலு அறிக்கை விடுத்துள்ளார்.

30 நாள்கள் சிறையில் இருந்தாலே பதவி பறிபோகுமா?

நீதி வழங்கும் தத்துவத்திற்கே எதிரான கருப்புச் சட்டம் இது!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக.22-

நாடாளுமன்றத்தில் நேற்று (20.8.2025) தாக்கல் செய்யப்பட்டுள்ள 130-ஆவது அரசியல் சட்டத் திருத்தம் என்பது ஜனநாயக விரோத, சட்ட விரோத கருப்புச் சட்டம் என்று திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நேற்று (20.8.2025) நாடாளுமன்ற மக்களவையில் உள்துறை அமைச்சர் அமித் ஷா வினால் முன்மொழியப்பட்டுள்ள 130-ஆவது இந்திய அரசியல் சட்டத் திருத்த மசோதா - ஜனநாயகத்திற்கான சவப்பெட்டியை ஆயத்தப்படுத்தி, சர்வாதிகார (அதிபர்) யதேச்சதிகார ஆட்சியை மறைமுகமாக செயல்படுத்தும் ஒரு புதிய ஏற்பாடாகும்.

எனவே, அதை எதிர்த்து, தீவிர சிகிச்சைப் பிரிவில் ஆட்பட்டுள்ள ஜனநாயகத்தைக் காப்பாற்ற, எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து நாடாளுமன்றத்திலேயே தங்களது கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தது, காலத்தால் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக - இந்திய அரசியல் சட்ட பாதுகாப்புக்கான - முதல் முழக்கமாகும்.

புதிய வகை நஞ்சு உலா வருகிறது!

நஞ்சுகளில் இப்போது ஒரு வகை புதிய வகை நஞ்சு உலா வருகிறது. முந்தைய நஞ்சு - கொடுத்தவுடன் ஆளைச் சாக டிக்கும்; சவப் பரிசோதனையில் நஞ்சு கொடுத்துக் கொல்லப்பட்ட விஷயம் வெளியே வர வாய்ப்பு உண்டு. ஆனால், இந்தப் புதுவகை நஞ்சு, நேரிடையான நஞ்சாக இல்லாமல், உடல் உறுப்புகளை மெல்ல மெல்ல, ஆனால், ஒவ்வொரு உறுப்பையும் செயல்பட விடாது, மனிதர்களைச் சில மாதங்களிலேயே மரண மடையச் செய்யும்; வெளியில் உள்ளவர்களோ, ஏதோ 'இயல்பான மரணம்தான்' என்றே கருதக்கூடும்; கொடுக்கப்பட்ட நஞ்சு மெல்லக் கொல்லும் முறை (Slow Poisoning) வெளியில் தெரியாமலேயே போய்விடும்.

அந்த ரகத்தைச் சேர்ந்த அரசியல் கொடுஞ் சட்ட மசோதாதான் 130-ஆவது அரசியல் சட்டத் திருத்தம்.

இயற்கை நீதிக்கு மாறுபட்ட சட்டம்!

விசாரணைக் கைதியாக 30 நாள்கள் சிறையில் இருந்தால், பிரதமர், முதலமைச்சர், அமைச்சர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பதவி தானாகவே பறிபோகும் என்பது, நீதி வழங்கும் தத்துவத்திற்கே கூட எதிரானது மட்டுமல்ல; இயற்கை நீதி (Natural Justice) என்பதற்கும் கூட எதிரான பச்சை அநீதியான கருப்புச் சட்டமாகும்.

மசோதாவில் குறிப்பிடப்படும் பதவியாளர்கள்மீது அழிவழக்குப் பதியப்பட்டு, பொய்ப் புகார்கள் ஆனாலும்கூட - 'ரிமாண்டு' 15 நாள்கள் காவல், அடுத்த ரிமாண்ட் நீட்டல், அடுத்த 15 நாள்கள் என்று ஆக்கப்பட்டாலே, 30 நாள்கள் அவர்களது பதவிப் பறிப்பு உடனே செயல்படுத்தப்படும் என்பது நியாயமானதா?

ஒருவர்மீது எந்த வழக்குப் போடப்பட்டாலும்,

குற்றம் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டு, நீதி மன்றத்தால் தண்டனை வழங்கப்படும் வரையில், அவர் "குற்றம்" சுமத்தப்பட்டவரே தவிர, குற்றம் முழுமையாக விசாரிக்கப்பட்டு, தண்டனை உறுதியாக வழங்கும்வரை, அவர் நிரபராதிதான்; குற்றவாளி அல்ல. அரசியல் சட்டத்திற்கு மட்டுமல்ல; சிவில், கிரிமினல் சட்ட விதிமுறைகளுக்கேகூட, இவர்கள் முன்வைத்துள்ள சட்டம் முற்றிலும் முரணாகும்.

இவர்கள் ஆட்சியில் தண்டிக்கப்பட்டு, தண்டனை நிறுத்தத்தால் எம்.பி., தேர்தலில் நின்று வென்ற கதை மறந்துவிட்டதா? அது எந்த வகை நீதி?

ஆதரிப்பவர்களையே பதம் பார்க்கும்!

வாக்கு வங்கி தங்களுக்குச் சாதகமில்லாத நிலையில், மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்களையெல்லாம் சிறிதும் 'லஜ்ஜை' இல்லாமல் - கூச்சநாச்சமின்றி, அமைச்சர்களாக ஒன்றிய அரசில் நியமிப்பது ஒருபுறம்; மறுபுறம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்கள் ஆதரவு பெற்று ஜனநாயகப் பதவியில் அமர்ந்தவர்களை குறுக்கு வழியில் இப்படிப் பதவி நீக்கம் செய்து, 'நானே ராஜா; நாங்கள் வைத்ததே சட்டம்' என்று ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கூட்டணி முன்மொழியுமானால், அவர்களது கூட்டணிக் கட்சிகளையும், நிரந்தர அடிமைகளாக்கிட இது ஒரு மிரட்டல் ஆயுதம் என்பதை அவர்கள் மறந்து, தலையாட்டி பொம்மைகளாகி, தலையாட்டினால், இம்மசோதா சட்டமானால், அவர்களையும்கூட பதம் பார்க்கும்!

"தீ கடைசி வீட்டுக்கு த்தான்; என் வீட்டில் அல்ல" என்று நினைக்கும் "புத்திசாலிகள்"(?) நிலைதான் - இதனை ஆதரிக்க முன்வரும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆதரவுக் கட்சிகளுக்கும் என்பதை நிதான புத்தியுடன் கவனித்து, ஜனநாயகத்தைப் பிழைக்க வைக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்!

கண்டனக் குரல் வெடித்துக் கிளம்பட்டும்!

அரசியல் சட்டக் கர்த்தாக்கள் தந்த அடிப்படை உரிமைகளைப் பகற்கொள்ளைபோல் பறிப்பதே இப்புதிய கருப்பு மசோதா!

நாடு முழுவதும் இதனை எதிர்த்துக் கண்டனக் குரல் - பொங்கும் கடலாய் குலுங்கிட - அதில் மசோதா கொண்டு வந்தவர்களின் முயற்சி முற்றாகத் தோற்கடிக்கப்பட "மக்கள் விழிப்புணர்வுப் பிரச்சாரப் புயல்" தொடங்கப்படவேண்டியது அவசரம், அவசியம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம், சேகோசர்வ் சங்கத்தில் ஜவ்வரிசி விற்பனையை ஊக்குவிக்கவும், பொதுமக்கள் அனைவரும் எளிதாக வாங்கி பயன்பெறும் வகையிலும் வேதிப்பொருள் கலப்படமில்லா ஜவ்வரிசி 200 கிராம் பாக்கெட்டுகளின் விற்பனையை துவக்கி வைத்து, தரம் உயர்த்தப்பட்ட சேகோசர்வ் சங்க ஆய்வகத்தை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். அருகில் சட்டமன்ற உறுப்பினர் அருள், அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் உள்ளனர்.

திமுக இளைஞரணி அறக்கட்டளை சார்பில் வழங்கப்படும் மருத்துவ உதவித்தொகையை திருவள்ளூர் மத்திய மாவட்டதில் வசித்து வரும் முகமது ரஃபி அவர்களுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அவரது குடும்பத்தினரிடம் வழங்கினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ் நகர கழக செயலாளர் ஜி.ஆர்.திருமலை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே. சுரேஷ் குமார் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அக்னி ராஜேஷ் நகர இளைஞரணி அமைப்பாளர் அ.முகமது ராஷிக் ஹனீப் வட்டக் கழக செயலாளர் சத்யா மற்றும் இளைஞர் நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

கடலூர் மாவட்டம், நல்லூர் ஒன்றியம், சிறுமங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் முகாமினை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் அரசு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.